# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஜனவரி மாதம் வெள்ளிகிழமை 03ம் நாள் சாட்சியாகிய கீதாலட்சுமி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதாலட்சுமி | வயது | 61 |
| க/பெ. | ஆதிகேசவலு | இனம் | பெண் |
| கிராமம் | வடமாணபாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.09/2023**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்)

**<u>குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில் 03.01.2025 ம.சா.2</u>**

1. மனுதாரர் எனது மகள் என்றால் சரிதான். மனுதாரர் என்ன பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் என்ன படிப்பு படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன்.

2. எனது மகளுக்கு இருவீட்டார் சம்மதத்தின் பேரில் தான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மகள் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளார். எனது மகள் திருமணத்திற்கு மொத்தம் எவ்வளவு செலவு செய்தேன் என்றால் ரூ.5 லட்சம். நான் செலவிற்கான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. எனது மகளின் திருமணத்தின் போது கொரானா ஊரடங்கு என்பதால் அதிக நபர்கள் திருமணத்தில் கலந்து கொள்ள முடியாது என்றால் அப்போது அந்த கட்டுபாடுகள் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.50 ஆயிரத்திற்கு குறைவாக தான் திருமண செலவு ஆனது என்றால் சரியல்ல. செலவு செய்யவில்லை என்பதால் தான் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கொரானா காலம் என்பதால் ரசீதுகள் வாங்கமுடியவில்லை.

4. எனது மகள் எதிர்மனுதாரருடன் எவ்வளவு நாட்கள் குடும்பம் நடத்தினார் என்றால் 30 நாட்கள் கூட இல்லை. எனது மகள், எதிர்மனுதாரரின் திருமணம் எனது மகளுக்கு 2வது திருமணம் என்றால் சரிதான். முதலாவது திருமணத்தை என்ன காரணத்திற்காக விவாகரத்து செய்தார் என்றால் ஆண்மையில்லை என்பதால் எனது மகள் விவாகரத்து கேட்டார். தற்போது இந்த எதிர்மனுதாரர் மீதும் அதே குற்றச்சாட்டு தெரிவித்துள்ளோம் என்றால் சரிதான்.

5. எனது மகள் எனக்கு போன் செய்து தாம்பத்தியம் ஏற்படவில்லை என்று எப்போது சொன்னார் என்றால் திருமணம் ஆகி 4 மாதங்கள் கழித்து சொன்னார்.

(எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me

in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I
Arakkonam.